இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 25-06-2024



# கனிவான நிர்வாகம்

மெத்தனாலைக் கலக்கி குடித்து ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இறந்த சம்பவம், மிகமிக வருத்தத்துக்குரியது. இந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுப்பாதுகாப்புடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இறந்தவர்கள் குடும்பத்துக்கு பத்து லட்சம் ரூபாய் வழங்கினார் முதலமைச்சர் அவர்கள். அன்றைய தினமே அதனை வழங்கினார் முதலமைச்சர் அவர்கள். மருத்துவமனையில் இருப்போர் குடும்பத்துக்கும் உடனடியாக ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

அந்தப் பகுதியில் மருத்துவர்கள், செவிலியர்களது ஆய்வுப் பணியானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர்களையும் அரசு பாதுகாத்து வருகிறது. மருத்துவ ஆலோசனை கொடுத்து வருகிறது அரசு. இறந்து போனவர் குடும்பத்துக்கு இழப்பீடுத் தொகை கொடுத்ததோடு தனது கடமை முடிந்துவிட்டதாக அரசோ, முதலமைச்சரோ நினைக்கவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனிவான இன்னொரு நடவடிக்கையை சமூக ஊடகங்களில் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ‘குடித்து விட்டு செத்தவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டுமா?’ என்று கோபமாகக் கேட்பவர்கள் கூட, இறந்தோர் குடும்பத்துப் பிள்ளைகளின் படிப்புக்கு முதலமைச்சர் அவர்கள் உதவி செய்வதை ஆதரித்து பதிவுகளைப் போட்டு வருகிறார்கள்.

**“இந்த அரசானது கள்ளச்சாராயத்தை அறவே ஒழிப்பதற்கு மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையிலும், இதுபோன்ற சில விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படுவது மிகவும் வேதனைக்குரியது. இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும். அதனடிப்படையில், இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கவும், அவர்களின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டும், ஏற்கனவே அறிவிக்கப்பட்டு 10 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியுடன் பின்வரும் நிவாரணங்கள் கூடுதலாக வழங்கப்படும்”** என்று சொல்லி முதலமைச்சர் அவர்கள் மிகமிக முக்கியமான அறிவிப்பைச் செய்தார்கள்.

*** பெற்றோர் இருவரையோ அல்லது ஒருவரையோ இழந்து வாடும் குழந்தைகளின் பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும்.**

*** பெற்றோர் இருவரையும் இழந்து ஆதரவின்றி தவிக்கும் ஒவ்வொரு குழந்தையும் பாதுகாவலர் பராமரிப்பில் வளர, அவர்கள் 18 வயது நிறைவடையும் வரை மாத பராமரிப்புத் தொகையாக தலா ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படும்.**

*** பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு உடனடி நிவாரணத் தொகையாக அவர்களின் பெயரில் தலா ஐந்து லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிலையான வைப்புத் தொகையில் வைக்கப்படும். அவர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் அந்தத் தொகை வட்டியுடன் அவர்களுக்கு வழங்கப்படும்.**

*** பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்து வாடும் குழந்தைகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும்.**

*** பெற்றோர் இருவரையோ அல்லது ஒருவரையோ இழந்து வாடும் குழந்தைகளுக்கு, அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளிலும் முன்னுரிமை வழங்கப்படும்.**

*** பெற்றோரை இழந்த குழந்தைகள், அவர்களது விருப்பத்தின் பேரில், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லங்கள் மற்றும் விடுதிகளில் சேர்க்கப்படுவர்.** - ஆகிய அறிவிப்புகள் பலராலும் ஆதரித்து வரவேற்கப்படுகின்றன. ‘இப்படி ஒரு முதலமைச்சர் சிந்திக்க முடியுமா என்ற அளவுக்கு சிந்திக்கிறார் முதலமைச்சர்’ என்று சொல்லி இருக்கிறார்கள் பலரும்.

சில நாட்களுக்கு முன் பள்ளிக் கல்வித் துறையின் ஐம்பெரும் விழாவில் பேசிய முதலமைச்சர் அவர்கள், **“மாணவச் செல்வங்கள், படிப்பதற்கு சமூகமோ, பொருளாதாரமோ, அரசியல் சூழ்நிலையோ எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பதே திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை ஆகும்”** என்று சொன்னார்கள். சொன்னது ஏதோ வாய்வார்த்தைக்குச் சொன்னது அல்ல, அலங்காரச் சொல் அல்ல என்பதை கள்ளக்குறிச்சி சம்பவத்திலேயே முதலமைச்சர் அவர்கள் மெய்ப்பித்துவிட்டார்கள்.

“நடைபெற்ற சம்பவத்துக்கு முதலமைச்சர் பொறுப்பேற்க வேண்டும்” என்று இங்கு பேசினார்கள். உள்துறையைக் கவனிப்பவன் என்ற முறையில் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் எந்தப் பிரச்சினையில் இருந்தும் ஓடி ஒளிபவனல்ல நான். பொறுப்பை உணர்ந்ததால்தான் பொறுப்புடன் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். எடுத்த நடவடிக்கைகளையும் பட்டியலிட்டிருக்கிறேன். குற்றவாளிகளைக் கைது செய்துவிட்டுத்தான் உங்களுக்கு பதில் அளித்திருக்கிறேன். திறந்த மனத்தோடு இரும்புக் கரம் கொண்டு குற்றம் புரிந்தவர்களை அடக்கி வருகிறேன்” என்று சொன்னார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முதலமைச்சரின் பொறுப்பு என்பது அரசியல் பொறுப்பு மட்டுமல்ல; அனைத்து மக்களின் வாழ்க்கைப் பொறுப்பையும் உணர்ந்தவராக முதலமைச்சர் அவர்கள் செயல்படுவதை இதன் மூலம் அறியலாம்.

**அந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் எதிர்காலம் நம் கண்ணுக்கு முன்னே சிதைந்து விடக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்த சிந்தனையில் தான் அவரது கனிவான சிந்தனையும், அவரது ஆட்சிக் கொள்கையின் இதயமும் அமைந்திருக்கிறது. அரசு என்பது நிர்வாக இயந்திரம் அல்ல, நிர்வாக இதயம் என்பதைக் காட்டிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**



சென்னை ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி தி.மு.க. செயலாளர் மா.பா.அன்புதுரை இல்லத் திருமண விழா சென்னை ஆர்.ஏ.புரத்தில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இத்திருமணத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்கள் சூர்யா – பிரவீன் ஆகியோரை வாழ்த்தினார். திருமண விழாவில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மணமக்கள் தங்களுக்கு பிறக்கப் போகும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் வைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இத்திருமண விழாவில், துர்கா ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், எழிலரசன் நாகநாதன், வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அன்புதுரை என்ற பெயருக்கு ஏற்றாற்போல

# அன்போடு அனைவரிடமும் பழகக்கூடியவர்!

## பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை இல்ல மணவிழாவை நடத்தி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, ஜூன் 25-**

**“அன்பு துரை என்ற பெயருக்கு ஏற்றாற் போல அன்போடு அனைவரிடமும் பழகக்கூடியவர் மா.பா. அன்புதுரை” என்று அவரது இல்ல மணவிழாவை தலைமையேற்று நடத்தி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.6.2024) சென்னை, ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா. அன்புதுரை அவர்களது இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

இந்த சிறப்பான மணவிழா நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் நான் முதலில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தம்பி உதயநிதி அவர்கள் பேசியதுபோல், இது எங்கள் குடும்பத் திருமணம். அதனால்தான் குடும்பத்தோடு வந்திருக்கிறோம்.

அன்புதுரையைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், சொல்லிக் கொண்டே இருக்கலாம். அவர் சாதாரண ஒரு மன்றத்தின் செயலாளராக இருந்து, அதற்குப் பிறகு இளைஞர் அணியில் பொறுப்பேற்று, வட்டச் செயலாளராக, பின்னர் பகுதிச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இன்னும் பல்வேறு பொறுப்புகளுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், சூழ்நிலையின் காரணமாக வர முடியாத ஒரு நிலை. ஆனால் அதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டது இல்லை. தலைவர் என்ன சொல்கிறாரோ, அதுதான் வேதவாக்கு.

### வெற்றியோடு திரும்பும் ஆற்றல் பெற்றவர்!

அன்புதுரையைப் பொறுத்தவரையில், நான் 1984ஆம் ஆண்டு முதன்முதலில் ஆயிரம் விளக்குத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்ட நேரத்தில் எனக்காகப் பணியாற்றியவர். வீடு வீடாகச் சென்று வாக்குகளைச் சேகரிக்கும் பணியில் அவர் ஈடுபட்ட விதம் இன்னும் என்னால் மறக்க முடியாது. ஒவ்வொரு தெருவாக அழைத்துச் செல்வார். அண்ணா அறிவாலயத்திற்கு அருகில் இருக்கும் இளங்கோ சாலையாக இருந்தாலும் சரி, அதையொட்டி இருக்கும் எல்லையம்மன் காலனியாக இருந்தாலும் சரி, வீனஸ் காலனியாக இருந்தாலும் சரி, போயஸ் கார்டனாக இருந்தாலும் சரி, எல்லா இடத்திற்கும் அழைத்துச் சென்று, என்னை அறிமுகப்படுத்தினார்.

காரணம் அவர் ஏற்கனவே எல்லோரிடத்திலும் அறிமுகம் ஆனவர். எல்லோருடைய பெயரையும் சொல்லி, அந்தத் தொகுதியில் இருக்கும் எல்லோரையும் அழைக்கக்கூடியவர் நம்முடைய அன்புதுரை அவர்கள். மதியம் நேரம் ஆகிவிட்டது, வெயில் வந்துவிட்டது, போதும் என்றால் கூட இன்னும் இரண்டு வீடுதான், இன்னும் இரண்டு வீடுதான் என்று சொல்லி, அழைத்துக் கொண்டே போய்க் கொண்டிருப்பார்.

அந்த அளவிற்குத் தேர்தல் பணியாக இருந்தாலும், கட்சிப் பணியாக இருந்தாலும் அவரிடத்தில் ஒன்று சொல்லிவிட்டால், முடியாது என்று சொல்லமாட்டார். கஷ்டம் என்றுகூட கூறமாட்டார். நீங்கள் சொல்லிவிட்டீர்கள், நான் முடித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு அதை வெற்றியோடு முடித்துத் தரும் ஆற்றலைப் பெற்றவர் நம்முடைய அன்புதுரை அவர்கள்.

அன்புதுரையின் இல்லத்தில் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். நியாயமாக, நான் நீண்ட நேரம் இந்த விழாவில் கலந்து கொண்டு உங்களோடு இருந்திட வேண்டும். ஆனால், சட்டமன்றம் முன்கூட்டியே காலை 9.30 மணியளவில் தொடங்கவிருக்கிறது. அதனால், நான் நீண்ட நேரம் நின்று உங்களுடன் பங்கேற்க முடியாததற்காக உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன். நான் வரும்போதுகூட ஒரு கண்டிஷன் போட்டுவிட்டுத்தான் வந்தேன். வந்து மாங்கல்யம் எடுத்துக் கொடுத்துவிட்டு நான் போய்விடுவேன். அதற்குப்பிறகு மற்றவர்கள் எல்லாம் பேசுவார்கள் என்று சொன்னேன். அதே போல்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், நானே விரும்பி அன்புதுரையைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல வேண்டும் என்று எனக்கு உணர்வு ஏற்பட்டு, அந்த உணர்வைச் சொல்லவில்லை என்று சொன்னால், நான் நன்றி மறந்தவனாகிவிடுவேன். அதனால்தான், அந்த உணர்வோடு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நானும் மணமக்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்.

அன்புதுரை எந்த இலட்சியத்திற்காக, எந்த கொள்கைக்காக, அன்புதுரை மட்டுமல்ல, அவருடைய துணைவியார் அவர்களும் மாநகராட்சி மாமன்ற உறுப்பினராக இருந்து அவர் கட்சிப் பணியாற்றியிருக்கும், பொதுப்பணி ஆற்றியிருக்கும் அந்த நிலைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்த வட்டாரத்தைப் பொறுத்தவரை, அன்புதுரையைத் தெரியாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். அந்த அளவிற்கு அன்புதுரை என்ற பெயருக்கு ஏற்றாற்போல அன்பு, அன்பு அன்பு என்று எல்லோரிடத்திலும் அன்போடு பழகக்கூடியவராக இருக்கிறார். அவருடைய செல்வங்கள், மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் பெற்றுச் சிறப்போடு வாழ்ந்திட வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும் “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” இருந்து பாடுபடுங்கள், பணியாற்றுங்கள். அதே நேரத்தில், மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களுக்கு ஓர் உரிமையான வேண்டுகோள்; அனைத்து இடங்களிலும் சொல்வதுதான், உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு நீங்கள் அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்; தமிழ்மொழிக்குச் சிறப்பு சேர்த்துத் தாருங்கள் என்று அவர்களிடத்தில் என்னுடைய அன்பான வேண்டுகோளை வைத்து வாழ்க மணமக்கள்! வாழ்க மணமக்கள்! என்று தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நேற்று (24.06.2024) 2024–2025 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.